பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

02 02 2025 **SUNDAY** 12 40 **PM**

வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வசந்த பஞ்சமியை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- கடந்த பத்தாண்டுகளில் இந்தியா குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் அடைந்துள்ளதாக ஐ.நா பொதுச்சபையின் தலைவர் திரு. **Philemon Yang** கூறியுள்ளார்.

- தமிழகத்தில் ஈரநிலங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

- குஜராத்தில் பயணியர் பேருந்து பள்ளத்தில் விழுந்து நேரிட்ட விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

- 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான இறுதியாட்டத்தில் தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்து வருகிறது.

>>>>><<<<<

வட இந்தியாவில் தை மாதத்தில் வரும் வளர்பிறை ஐந்தாம் நாளான இன்று வசந்த பஞ்சமி தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளில் கல்வியை தொடங்கும் குழந்தைகளுக்கு சிறப்பான எதிர்காலம் அமையும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், கல்வி, வளம், அறிவு, மகிழ்ச்சி ஆகியவற்றுடன் இணைந்த இந்த விழாவை நாட்டுமக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

உலகின் அறிவுசார் மையமாக இந்தியா உருவெடுக்க வேண்டும் என்று தாம் இறைவனை பிரார்த்திப்பதாக அவர் அதில் தெரிவித்துள்ளார்.

இந்த நாளையொட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி, விடுத்துள்ள சமூகவலைதளப் பதிவில், ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சி, வளம் ஆகியவற்றை இந்த தினம் வழங்கட்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தில்லி சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரம் இறுதிகட்டத்தை எட்டியுள்ளது.

நாளை மாலையுடன் பிரச்சாரம் நிறைவடையவுள்ள நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சிகளைச் சேர்ந்த மூத்த தலைவர்கள் தங்களது வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

ஆர்.கே. புரத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி உரையாற்றுகிறார்.

தில்லியின் பல்வேறு பகுதிகளில் ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த மூத்த தலைவர்களில் ஒருவரும், பஞ்சாப் முதலமைச்சருமான திரு. பகவந்த் மான் அக்கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரச்சாரம் மேற்கொண்டுள்ளார்.

முஸ்தாபாபாத் தொகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உரையாற்றுகிறார்.

தில்லியில் பல்வேறு பகுதிகளில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களான திரு. ராகுல்காந்தி, திருமதி, பிரியங்கா காந்தி ஆகியோர் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

70 உறுப்பினர்களைக் கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு வரும் 5ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது.

இம்மாதம் 8ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

>>>>><<<<<

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக ஐ.நா பொதுச்சபையின் தலைவர் திரு. **Philemon Yang** தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அவர், டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்பம் அடிப்படையிலான செயல்பாடுகள் இந்தியாவின் முன்னேற்றத்திற்கு காரணியாக திகழ்ந்தது குறித்து தமது இந்தியப் பயணத்தின் போது அறிந்து கொள்வதில் ஆர்வத்துடன் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அரசுமுறைப் பயணமாக இம்மாதம் 4ஆம் தேதி முதல் 8ஆம் தேதிவரை அவர் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் உள்ள ஈரநிலங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உலக ஈர நிலங்கள் தினமான இன்று ராமநாதபுரம் மாவட்டம், சக்கரக்கோட்டை மற்றும் தேர்த்தங்கல் பறவைகள் காப்பகங்கள் ஆகியவை புதிய ராம்சார் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளதற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, தமிழகத்தில் உள்ள ஈரநிலங்களின் எண்ணிக்கை 20-ஆக அதிகரித்துள்ளது என்று அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை வளங்களை பாதுகாப்பதில் மாநில அரசு தொடர்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

**>>>>><<<<<**

தமிழகத்தில் விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் நேரடி நெல்கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், ஆண்டுதோறும் விளைவிக்கப்படும் 120 லட்சம் டன் நெல், போதிய பாதுகாப்பு வசதிகள் இல்லாத காரணத்தால் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதாக தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில் கொண்டு கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கையை ஐந்தாயிரமாக அதிகரிக்கவும், சேமிப்புக் கிடங்குகளின் எண்ணிக்கையை 500ஆக உயர்த்தவும் மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

விவசாயிகளின் நலன் கருதி வேளாண் விளைபொருள் கொள்முதல் வாரியத்தை மாநில அரசு தொடங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

**>>>>><<<<<**

குஜராத் மாநிலம், **Dang** மாவட்டத்தில் இன்று அதிகாலை பயணியர் பேருந்து பள்ளத்தில் விழுந்து நேரிட்ட விபத்தில் இரண்டு பெண்கள் உட்பட 5 பேர் உயிரிழந்தனர். 17 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் அருகில் மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

48 யாத்ரிகர்களுடன் மஹாராஷ்ட்ராவில் உள்ள **Trimbakeshwar**–லிருந்து குஜராத் மாநிலம் துவாரகா நோக்கி சென்று கொண்டிருந்த இந்த பேருந்து, கட்டுப்பாட்டை இழந்த 35 அடி பள்ளத்தில் விழுந்து இந்த விபத்து ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**>>>>><<<<<**

மத்திய பட்ஜெட்டில் சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கான முதலீட்டு உச்சவரம்பு, விற்பனை உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று இந்திய தொழில்துறை கூட்டமைப்பின் இணைத்தலைவர் திரு. பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இது சிறு குறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளித்திடும் என்று தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்-பொன்னுசாமி 48 செகண்ட்ஸ்)

மத்திய பட்ஜெட்டில் சிறு குறு தொழில்முனைவோருக்கு பலனளிக்கும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளதற்கு அகில இந்திய சிறுதொழில் அமைப்பு மற்றும் குறு சிறு தொழில் மாவட்ட மையம் வரவேற்பு தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக எமது செய்தியாளரிடம் பேசிய அகில இந்திய சிறுதொழில் அமைப்பைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார், இந்த பட்ஜெட் தொழில்நிறுவனங்களுக்கு உத்வேகம் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - ஜெயக்குமார் 44 செகண்ட்ஸ்)

சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு 5 லட்சம் ரூபாய் உச்சவரம்புடன் கூடிய கடன் அட்டைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது என்று குறு சிறு தொழில் மாவட்ட மையத்தின் பொறுப்பாளர் திரு. திருநாவுக்கரசு கூறியுள்ளார்.

(சவுண்ட் பைட் - திருநாவுக்கரசு 30 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான இறுதியாட்டத்தில் முதலில் பேட் செய்து வரும் தென்னாப்பிரிக்க அணி சற்றுமுன்வரை 11 புள்ளி மூன்று ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 40 ரன் எடுத்துள்ளது.

கோலாலம்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில், டாஸ் வென்ற தென்னாப்பிரிக்கா முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

>>>>><<<<<

நெதர்லாந்தில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியின் 12வது சுற்றில் இந்தியாவின் பிரக்ஞானந்தா செர்பியாவின் **Alexey Sarana**–வை வென்றார்.

12வது சுற்று முடிவில் இந்தியாவின் பிரக்ஞானந்தா மற்றும் குகேஷ் 8 புள்ளி ஐந்து புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளனர்.

>>>>><<<<<

இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையேயான 5வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

மும்பையில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>><<<<<

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ஜம்ஷெட்பூர் அணி – கோவா அணியை எதிர்கொள்கிறது.

>>>>><<<<<

உலக **Pickel Ball** லீக் போட்டியின் இறுதியாட்டத்தில் இன்று பெங்களூரு அணி – புனே அணியை எதிர்கொள்கிறது.

**>>>>>END<<<<<**